Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.19/2025 Date:22.05.2026
Deposition of witness for prosecution: PW1 ( LW 1)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | நதியா | Village | கம்பம் |
| Father/ Husband Name | ஜெயபிரகாஷ் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 37 /2026 | Calling | கூலி |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 22.05.2026 TIME 12.50 **PM**

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :-**

நான் தற்போது கம்பத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 2 வருடத்திற்கு முன்பு எனது வீட்டின் முன்பு கூட்டமாக இருந்தார்கள். என்ன சத்தம் என பார்ப்பதற்கு நான் சென்றபோது அங்கே ஏற்பட்ட தள்ளுமுள்ளில் நான் கீழேவிழுந்ததில் ஊமைக்காயம் ஏற்பட்டது. நடந்த சம்பவத்தைப் பற்றி காவல் நிலையத்தில் சொல்வதற்கு சென்றபோது காவல் நிலையத்தில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டபடும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது **அசாஆ.1** ஆகும். புகாரில் எழுதியுள்ள விபரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது மகன் வைரவன் 1-வது எதிரியின் மகனுடன் தவறான உறவு வைத்துக்கொண்டதாக போலிசில் புகார் அளித்திருந்து சிறைக்கு சென்றான், பிரச்சனையை தவிர்க்க வேண்டி எனது மகன் வைரவனை, கம்பம் புதுப்பட்டியில் உறவினர் வீட்டில் தங்க வைத்திருந்தேன். 18.01.2024-ம் தேதி அன்று எனது மகன் வைரவன் எங்களது வீட்டிற்கு வந்து தங்கிவிட்டு சென்றுவிட்டான் இதனை அறிந்த எதிரிகள் கடந்த 19.01.2024 ம் தேதி காலை 09.00 மணிக்கு நான் எனது வீட்டில் இருந்த போது அங்கு வந்த ஆஜர் 1-வது எதிரி எனது வீட்டின் முன்பு நின்று என்னை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, எனது வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து உன்னை என்ன செய்வேன் பார் என சொன்னதால், சத்தம் போடவே அருகில் இருந்து எனது மாமா பாண்டியன், வந்து விலக்கிவிடவே எதிரிகள் சென்றுவிட்டார்கள் என்றும், மீண்டும் மதியம் 01.00 மணியளவில் நான் தான்,எனது மகன் வைரவனை மறைத்து வைத்துள்ளேன் என சொல்லியும் என்னை அடித்து கொன்றால் எல்லாம் சரியாக போகும் என சொல்லியும், 2-வது எதிரி கொண்டு வந்திருந்த எனது முன்னந்தலையில் அடித்ததில் இரத்த காயம் ஏற்பட்டது என்றும், அருகில் இருந்த மலர்விழியும், பாண்டியன் என்பவரும் விலக்கிவிட்டார்கள் என்றும், செல்லும் போது 2-வது எதிரி வைத்திருந்த கட்டையை வாங்கி அதனை காண்பித்து 1-வது எதிரி உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று என்னை பார்த்து கொலை மிரட்டல் செய்தார்கள் என்றும், புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல. நான் தற்போது எதிரிகளுடன் சமரசமாகி நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரிதான்.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

SD/P.Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.